DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)

IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM

**Sessions Case No.310/2023**

**(Preliminary Register.No.17/2023)**

Deposition of Witness **அ.சா.2 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.2

| NAME: | பெரியாச்சி | HUSBAND NAME: | முத்துச்சாமி |
|---|---|---|---|
| VILLAGE: | மல்லாம்பாளையம் | TALUK: | தாராபுரம் |
| CASTE: | --- | CALLING: | இல்லத்தரசி |
| RELIGION: | இந்து | AGE: | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.08.2026

1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி காணொலி வாயிலாக சிறைச்சாலையில இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை** :-

நான் தற்போது மல்லம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எனது மகள் ரேவதியுடனும், மாப்பிள்ளையுடனும், மல்லம்பாளையம் கொத்துகாரன் தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவம் நடந்த இரவு 11 மணிக்கு வீட்டின் வரண்டாவில் படுத்திருந்தேன். எனது மகள் ஹாலில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார், எனது மாப்பிள்ளை பழனிச்சாமி ஒரு அறையில் படுத்திருந்தார். திடீரென்று எனது மகள் சத்தம் போட்டார். சத்தம் கேட்டவுடன் நான் திடீரென்று எழுந்துவிட்டேன். எனது மாப்பிள்ளைக்கு வாத நோய் இருப்பதால் அவரால் உடனடியாக எழுந்து வர இயலாது. எதிரி எனது மகளை செயினை பிடுங்கி விட்டு வெளியில் ஓடிவருவதை பார்த்தேன். ஆஜர் 1ம் எதிரி தான் அந்த நபர் ஆவார். நான் கையை நீட்டிஅந்த நபரை பிடிக்க சென்றேன். அப்போது 1ம் எதிரி கத்தியால் எனது இடது கை மணிக்கட்டில் குத்திவிட்டார். சத்தம் கேட்டவுடன் அருகில் இருந்த துரைசாமி மற்றும் கார்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அப்போது தேடிப்பார்த்தபோது 1ம் எதிரி அங்கில்லை. கத்தியால் குத்தியதால் நாண் அணிந்திருந்த காவிநிற சேலை முழுவதும் இரத்தக்கரை படிந்தது. என்னிடம் காட்டப்படும் அந்த இரத்தக்கரை படிந்த காவிநிற சேலை தான் சா.பொ.2 ஆகும். பின்பு என்னை எனது மகள் ரேவதி மற்றும் துரைசாமியும் என்னை கரூர் அமராவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நான் 1 நாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அடுத்த நாள் நான் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது மகள் என்னை வீட்டில் விட்டு விட்டு மூலனூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்பு போலிசார் என்னை வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். அப்போது நான் நடந்த சம்பவங்களை போலிசாரிடம் சொன்னேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்களது தோட்டம் ,வீட்டில் எப்போதுமே விளக்கு எரிந்துகொண்டு தான் இருக்கும். சம்பவத்தின் போது தூங்கிகொண்டிருந்தேன். ஆனால் சிறிய சத்தம் கேட்டாலும் எழுந்துவிடுவேன். 1ம் எதிரி வீட்டை விட்டு வெளியே வரண்டாவில் தடுக்க முயற்சித்தேன் ஆனால் என்னால் தடுக்க முடியவில்லை. 1ம் எதிரி அவர் வைத்திருந்த கத்தியால் எனது கையை அறுத்துவிட்டு ஓடிவிட்டார். நானும் எனது மகளும் சத்தம்போட்டவுடன் எங்களது வீட்டை ஒட்டிய வீட்டை சார்ந்த கார்த்திக் மற்றும் துரைசாமி ஆகியோர்கள் வந்துவிட்டார்கள். 1மஎதிரி ஓடிய அரைமணிநேரம் கழித்து என்னை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். எனது மகள் அணிந்திருந்த நகை சுமார் 7 பவுன். அதில் மாங்கல்யமும், ஒரு குண்டும் கீழே விழுந்துவிட்டது. செயின் மட்டும் 6 ½ பவுனை 1ம் எதிரி கொண்டுசென்றுவிட்டார். அடுத்த நாளே எனது மகள் ரேவதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். கரூர் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு காலை 7 முதல் 8 மணிக்கு கிளம்பிவிட்டோம். 1ம் எதிரியால் ஏற்பட்ட காயத்திற்கு எனக்கு தையல் போடப்பட்டது. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எங்களது வீட்டிற்கும் துரைசாமி வீட்டிற்கும் சுமார் 20 அடி இருக்கும். எங்களது வீட்டிற்கும் கார்த்திக் வீட்டிற்கும் சுமார் 20 அடி தூரம் இருக்கும். எங்களது வீட்டிற்கும் கார்த்திக் என்பவரது வீட்டிற்கும் இடையில் தெய்வாணை என்பவரது பூமி உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் நானும் சென்றேன். என்னிடம் போலிசார் அங்கு வைத்து கையெழுத்து பெற்றார்களா என்றால் என்னிடம் போலிசார் எப்போதும் கையெழுத்து பெறவில்லை. எனது மகள் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தார். சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், 1ம் எதிரி அங்கு வரவில்லை என்றும், மேற்படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.